CC.No. 205 /2014 நாள் : 08.06.2026

PW3 - திரு.செல்வராஜ்

**<u>சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப் பட்டு இரண்டாம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) இந்த வழக்கின் இரண்டாம் எதிரி வடிவேலை இந்த வழக்கிற்கு முன்பாக நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. சின்னசாமி வகையறா இரண்டாம் எதிரி வடிவேலுக்கு விற்பனை செய்ததாக சொன்ன சொத்து யாருடைய அனுபோவத்தில் இருந்தது என்றால் சின்னசாமி வகையறா அனுபோவத்தில் இருந்தது. சின்னசாமிக்கு இரண்டாம் எதிரிக்கு விற்பனை செய்வதற்கு முன்பாக வேறு யாராவதுக்கு விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால் பழனிச்சாமிக்கு விற்பனை செய்த விவரம் தெரியும்.

2) இரண்டாம் எதிரிவடிவேலுக்கு சின்னசாமி வகையறா விற்பனை செய்தபோது யார் யார் சேர்ந்து விற்பனை செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இரண்டாம் எதிரிக்கு விற்பனை செய்ததில் வசந்தி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வசந்தி சின்னசாமிக்கு என்ன உறவு முறை என்றால் தெரியாது. வசந்தியுடைய கணவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. சுப்பிரமணியுடைய சட்டப்படியான மனைவியின் பெயர் என்ன என்றால் விஜயா என்ற விஜயலெட்சுமி. சுப்பிரமணியன் மனைவி வசந்தி என்று சொன்னால் சரியல்ல.

3) சின்னசாமி வகையராக்கள் இரண்டாம் எதிரிக்கு விற்பனை செய்ததது போல் வேறு யாராவதுக்கு விற்பனை செய்த ஒப்பந்தம் போட்டுள்ளார்களா என்றால் வசந்தி அவ்வாறு செய்தார். சின்னசாமி வகையறாக்கள் மீது பல உறிமையியல் வழக்குகள் நிலுவையில் உள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் ஒரு வழக்கு மட்டும் நிலுவையில் உள்ளது. ஏற்கனவே அ.சா.1 பழனிச்சாமிக்கு விற்ற சொத்தை தான் இரண்டாம் எதிரி வடிவேலுக்கு

விற்பனை செய்ய முயற்சித்ததை அதை நான் தெரிந்து தடுக்க முயற்சித்தேனா என்றால் விற்பனை செய்ததும் தெரியாது அதுவரையும் வடிவேல் யார் என்றும் தெரியாது.

**1,3,4,5,6 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

1)சின்னசாமி வகையறாவுக்கும் எனக்கும் பாத்தியப்பட்ட இடம் ஒரே காலை எண் என்று சொன்னால் சரிதான். நான் ஏற்கனவே சாட்சியம் அளித்ததில் நான் பதிவு அலுவலகத்திற்கு வரும்போது அங்கு வசந்தி இருந்தார்என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் கட்டாயமாக இருந்தார். எனக்கும் சின்னசாமி வகையறாவுக்கும் மட்டும் பாத்தியப்பட்ட காலை எண்ணில் வசந்திக்கு விற்பனை செய்யும் அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. தந்தை ஒரு நபர் என்பதாலும் தாய் வேறு வேறு நபர் என்பதால் எங்கள் இருவருக்கும் ஆரம்ப காலம் முதல் தற்போது வரை பரஸ்பர உறவில் இல்லை என்றால் சரியல்ல.

2) இந்த வழக்கில் நான் ஏற்னவே சாட்சியம் அளித்ததில் காழ்புணச்சியுள்ளது என்று சாட்சி அளித்திருந்தால்நீதிமன்றம் பாரப்பட்சம் பார்க்கலாமா என்றால் பார்க்கலாம். இந்த வழக்கின் புகார்தாரர் பழனிச்சாமி தான் என்னை சாட்சி அளிக்கும் படி கேட்டுக்கொண்டார் என்றால் சரிதான். நான் பழனிச்சாமியை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமிக்கும் சின்னசாமிக்கும் இருந்து உறிமையயில் தொடர்பான பிரச்சனை இருந்த விவரம் எனக்கு பழனிச்சாமி சொல்லி தான் தெரியாது என்றால் எனக்கு அதற்கு முன்பே வழக்கு பற்றி தெரியும்.

3) கிரையம் முடிந்த பிறகு வழக்கு போட்டார்களா அல்லது வழக்கு போட்ட பிறகு கிரையம் செய்தார்களா என்றால் பத்திரம் பதிந்த பின்பு தான் உறிமையியல் வழக்கு தாக்கல் செய்தார்கள். பழனிச்சாமிக்கும் சின்னசாமி வகையறாவுக்கும் கிரையம் செய்த விவரம்

எனக்குநேரடியாக தெரியாது என்றால் தெரியாது. அவர்கள் எந்த காலையில் கிரையம் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஏற்கனவே உறிமையியல் வழக்கில் பழனிச்சாமிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். உறிமையியல் வழக்கில் பழனிச்சாமி சின்னசாமி வகையறாவுக்கு எதிராக சாட்சியம் அளிக்க அழைத்தாரா என்றால் சரிதான். அதேபோல் இந்த வழக்கிலும் பழனிச்சாமி சின்னசாமி வகையறாவுக்கு எதிராக சாட்சியம் அளிக்க அழைத்தாரா என்றால் இல்லை.

4)இந்த வழக்கின் புகார்தாரர் பழனிச்சாமிக்கு சின்னசாமி வகையரா எழுதிக்கொடுத்தாக சொல்லப்படும் கிரையப்பத்திரத்தில் இவ்வழக்கின் ஆறாம் எதிரியான தமிழரசி கையொப்பம் செய்யவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமான சொத்து பரம்பரை சொத்து என்றாலும் சின்னசாமி வகையறாவின் சுய பாத்திய சொத்து இல்லை என்றால் இது பரம்பரை சொத்தில்லை, எனது தந்தை 1959 ல் ஏலத்துக்கு எடுத்து சொத்தாகும்.

5) நீதிமன்றத்தில் நான் இதற்கு முன்பு அளித்த சாட்சியத்தில் இந்த விவரத்தை சொல்லவில்லை என்றால் என்னிடம் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை. இந்த வழக்கு சம்மந்தமான சொத்து எப்போது பாகபிரிவினை செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 25.09.1990 அன்று A மற்றும் B பாகமாக பிரிக்கப்பட்டது. பாகப்பிரிவிணையின் ஆவண எண் எனக்கு தெரியுமா என்றால் ஆவணம் இருக்கிறது தாக்கல் செய்ய சொன்னால் தாக்கல் செய்வேன்.

6) நான் சாட்சியம் அளித்த வழக்கில் சொல்லப்படும் விவரங்கள் பாகசாசனத்தில் உள்ள சொத்து விவரங்களா என்றால் ஆம் எனக்கு தெரியும். பழனிச்சாமி வகையறாவுக்கு எழுதி கொடுத்த இடமானது தற்போதும் சின்னசாமி வகையறாவின் அனுபவத்தில் உள்ளதா என்றால் பழனிச்சாமியிடம் உள்ளது நிலத்தை சுற்றி கம்பி வேலி போட்டுள்ளார். சுமார்

எவ்வளவு வருட காலம் பழனிச்சாமி அனுபவத்தில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

7) பாகப்பரிவினை செய்யும் போது எனக்கும் சின்னசாமிக்கு மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் ஏற்படவில்லை. இப்போதும் நான் சின்னசாமி வகையறாவிடம் சுமுக உறவில் உள்ளேன் என்றால் ஓரளவு உள்ளேன். இவ்வழக்கில் சாட்சி சொல்லியுள்ள வசந்தி எனது உறவினர் தான் என்றால்இல்லை. இந்த வழக்கு சொத்திற்கும் வசந்திக்கும், எனக்கும் சின்னசாமி வகையறாவுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரரும் சின்னசாமி வகையறாவும் சுமுக பேச்சுவார்த்தைக்கு நடத்திய விவரம் எதுவும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

8) பாகசாசனம் ஏற்பட்டு எத்தனை காலம் கழித்து இந்த சொத்தை விற்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. நான் சொல்லும் விவரம் பொய் என்றாலும் பழனிச்சாமி என்னை சின்னசாமி வகையறாவுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்க அழைத்தார் என்றால் சரியல்ல. அழைப்பாணை கொடுத்ததன் பேரில் வந்துள்ளேன். புகார் வழக்கில் உள்ள சொத்து எனது குழந்தைகள் பொறுத்தவரை பரம்பரை சொத்து என்றால் நீதிமன்றம் தான் தீர்மானிக்க வேண்டும். வழக்கு சொத்தானது சின்னசாமி வகையறாவுக்கு அனுபவம் உள்ளது என்றால் இல்லை. சின்னசாமி வகையறா வழக்கின் புகார்தாரர் பழனிச்சாமிக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது.

9) 1990 ஆம் வருடம் இவ்வழக்கின் புகார்தாரருக்கு விற்பனை செய்தபோது சின்னசாமி வகையறாவின் வாரிசுதாரர்களின் பெயர் முழுமையாக வரவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் வாரிசு அனைவரும் கையொப்பம் செய்தார்கள். பாகபிரிவினை ஏற்பட்டபோது எந்த எந்த பாகம் யாருடையது என்ற விவரத்தை குறிபிட்டு நீதிமன்றத்தில்

யாது ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் செய்யவிலலை. நானும் சின்னசாமியும் ஒரு தகப்பன் மக்கள் சொத்து பாகப்பிரிவினை செய்யும்போது சின்னசாமி வகையறாவுக்கு கூடதலாகவும் தங்களுக்கு 20 செண்ட் குறைவாகவும் பாகபிரிவினை செய்யப்பட்டது அதனால் சின்னசாமி வகையறாவை பழிவாங்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் தங்களுக்கு எந்த சம்மந்தமும் இல்லாத வசந்தியை பற்றியும் சின்னசாமி வகையறா பற்றியும் பொய்யான சங்கதிகளை நீதிமன்றத்தில் முன்வைக்க வேண்டும் என்று இவ்வழக்கின் புகார்தாரர் பழனிச்சாமியுடன் சேர்ந்துக்கொண்டு வீன் பழி சுமத்தி வருகிறீர்கள் என்றால் தவறு. மேற்படி வழக்கு சம்மந்தமாக நானும் 20 வருடகாலமாக நானும் முறையாக பராமறித்து வருகிறேன் என்றால் 36 வருடமாக பராமறித்து வருகிறேன். அதனால் எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பது எளிதான விஷியம் என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.06.08 18:19:35 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

08.06.2026